சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கூட்டுறவுத் துறை – கருணை அடிப்படையிலான பணிநியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.பெ.கதிர்வேலு, ஒட்டுநரின் மகன் திரு.க.தேவராஜ், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் -- ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை

அரசாணை 3(ப) எண்.5

நாள்: 30.04.2021
பிலவ வருடம்
சித்திரை திங்கள் 17–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள் 23.01.2020.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண்.82717/2019/பதொ4, நாள் 05.12.2020.

------

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மண்டல இணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில் முசிறி சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் அரசுப் பணியிலிருக்கும் போது 16.05.2010 அன்று பணியிடை மரணமடைந்த திரு.பெ.கதிர்வேலு, ஒட்டுநரின் மகன் திரு.க.தேவராஜ் என்பவர் உரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்ததன் காரணமாக கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கி அரியலூர் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் 14.08.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்றும், இந்நிலையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் திரு. க.தேவராஜ், இளநிலை உதவியாளரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 14.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து தக்க ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, திரு. க.தேவராஜ் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில், கூட்டுறவுத் துறையில், அரியலூர் சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 14.08.2019 முற்பகல் முதல் அவர்

(த.பி.பா)

அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து, அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையவராகிறார் எனவும் ஆணையிடப்படுகிறது.

3. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட விவரத்தை பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வரசாணை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை அலுவல் சார்பற்ற எண்.34735/G2/2020-1, நாள் 23.12.2020 மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்பு துறை அலுவல் சார்பற்ற எண் 21393/Q1/2021-1, நாள் 05.01.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
திரு. க.தேவராஜ், இளநிலை உதவியாளர்,
(வழி: கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10).
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலகம், அரியலூர்.
மண்டல இணைப்பதிவாளர், திருச்சிராப்பள்ளி.

<u>நகல்:</u>
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறை , சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/5/2021
பிரிவு அலுவலர்
3/5/2021

பதிவஞ்சல்

மே.கு.எண். 82717/2019/ப.தொ.4

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை – 10.

நாள்:05.05.2021.

அரசு ஆணை 3(ப) எண்.5, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை, நாள்.30.04.2021, முகவரியில் கண்டுள்ள அலுவலர்களுக்கு தொடர்புறுத்தப்படுகிறது.

– ஆணைப்படி –

17/5/21

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்காக

பெறுநர்

17/05/2021

1. திரு க.தேவராஜ்,
இளநிலை உதவியாளர்
– அரியலூர் மண்டல இணைப்பதிவாளர் மூலமாக.

2. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்
அரியலூர் மண்டலம்,
அரியலூர்.

நகல் :– அலுவலக ப.தொ.2 பிரிவுக்கு.
(பணியாளர் பட்டியல் வரிசை எண் வழங்கும் பொருட்டு)

நகல் : – அலுவலக ப.தொ.4 பிரிவுக்கு
(பவானி சாகர் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பும் பொருட்டு)

நகல் : – இருப்புக் கோப்பு–2021 .

கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்
அலுவலகம், அரியலூர் மண்டலம்.
நாள் - 10.06.2021.

மே.கு.ந க 1973/ 2019 அபஅ

---

தொடர்புறுத்தப்படுகிறது.

(ஒம்)வ.சி.கோமதி
இணைப்பதிவாளர்

10/6/2021

இணைப்பதிவாளருக்காக.

10/6/2021

பெறுநர்
திரு.க.தேவராஜ், இளநிலை உதவியாளர்,
சரகத்துணைப்பதிவாளர் அலுவலகம் , அரியலூர்.

நகல்
சரக துணைப்பதிவாளர், அரியலூர்.பட்டியலுக்கு